செ.வெ.எண் : 34 /ஆகஸ்ட் நாள் : 17.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் மூலம் பாலில் உள்ள தரம் மற்றும் பாலில் உள்ள கலப்படம் குறித்த உணவு பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறவுள்ளன.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் மூலம் பாலில் உள்ள தரம் மற்றும் பாலில் உள்ள கலப்படத்தை பொதுமக்கள் அறிந்து விழிப்புணர்வு அடைந்திடும் வகையில் சிறப்பு உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படவுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உபயோகிப்பாளர் நிலைகளில் இருந்து பால் உணவு மாதிரிகள் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு உடனே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பாலில் உள்ள தரம் மற்றும் கலப்படத்தை பற்றிய உணவு பகுப்பாய்வு குறித்த விழிப்புணர்வு முகாம் வருகின்ற 28.08.2017 அன்று இராமநாதபுரம் நகரம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திலும், 29.08.2017 அன்று கீழக்கரை மற்றும் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழக்கரை நகராட்சி அலுவலகத்திலும், 30.08.2017 அன்று பரமக்குடி நகரம் மற்றும் வட்டாரம், போகலூர், நயினார்கோயில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு பரமக்குடி நகராட்சி அலுவலகத்திலும், 01.09.2017 அன்று கமுதி, முதுகுளத்தூர் மற்றும் கடலாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு முதுகுளத்தூர் பேரூராட்சி அலுவலகத்திலும், 04.09.2017 அன்று இராமேஸ்வரம் நகரம் மற்றும் மண்டபம் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு இராமேஸ்வரம் நகராட்சி அலுவலகத்திலும், 06.09.2017 அன்று ஆர்.எஸ்.மங்களம் மற்றும் திருவாடானை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு ஆர்.எஸ்.மங்களம் பேரூராட்சி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளன. நேரம் : காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை ஆகும்.

மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் முகாம்களில் பால் உணவு மாதிரிகள் பகுதி வாரியாக சேகரிக்கப்பட்டு உணவு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் உடனடியாக தெரிவிக்கப்படும். இதன்மூலம் பொது மக்களுக்கு பாலில் உள்ள தரம் மற்றும் கலப்படம் குறித்த தன்மைகள் தெரிவிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்ப்படுத்தப்பட உள்ளது.

மேற்குறிப்பிட்ட முகாமில் பொது மக்களும் தங்கள் உபயோகிக்கும் பாலின் தரத்தையும் கலப்படம் குறித்த தன்மையை அறிய விரும்புவர்கள் மேற்க்கண்ட முகாம்களில் பாலை(300 மி.லி) கொண்டு வந்து சேர்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.. பொது மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**